பக்கங்கள் 19+7

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

## தேசியத் தலைவராகச் செயற்பட்ட சம்பந்தனின் மறைவு நாட்டுக்குப் பேரிழப்பு

### சபையில் சஜித் இரங்கல்



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 07▶

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 ஆனி 19 செவ்வாய்க்கிழமை 02.07.2024 அதிர்வு 337



# பெருந்தலைவர் சம்பந்தனின் புகழுடல் அஞ்சலிக்கு!

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவர் இரா.சம்பந்தன் எம்.பியின் புகழுடல் கொழும்பு – பொரளை ஏ.எவ்.றேமண்ட்ஸ் மலர்ச்சாலையில் இன்று காலை 9 மணி முதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. அரசியல்வாதிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் சம்பந்தனின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தி வருகின்றனர். (மேலும் படங்கள் 2,3,4,5,ஆம் பக்கங்களில்)

# அதிகாரப் பகிர்வுடன் தீர்வைக் காண்பதே சம்பந்தனுக்கு நாம் செய்யும் நன்றிக் கடன்

## அவரின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து ஜனாதிபதி ரணில் நாடாளுமன்றில் உரை



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் மறைந்த நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் எப்போதும் இலங்கையின் ஆள்புல ஒருமைப்பாட்டுக்காகப் பங்காற்றினார் என்றும், அதிகாரப் பகிர்வு மேற்கொள்ளப்பட வேண்டிய விதம் தொடர்பில் அவருக்குத் தனியான நிலைப்பாடு இருந்தது என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். 07▶

# பெருந்தலைவர் சம்பந்தனின் புகழுடல் அஞ்சலிக்கு!













# பெருந்தலைவர் சம்பந்தனின் புகழுடல் அஞ்சலிக்கு!












# சம்பந்தனின் புகழுடலுக்கு சஜித் அஞ்சலி



பெருந் தலைவர் இராஜவரோதயம் சம்பந்தனின் புகழுடல் இன்று பொரளை கொழும்பு – பொரளை ஏ.எவ். றேமண்ட்ஸ் மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருக்கும் நிலையில், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அங்கு சென்று சம்பந்தனின் புகழுடலுக்குத் தனது மரியாதையையும் அஞ்சலியையும் செலுத்தினார்.







# சம்பந்தனின் புகழுடலுக்கு மஹிந்த அஞ்சலி



கொழும்பு – பொரளை ஏ.எவ்.றேமண்ட்ஸ் மலர்ச் சாலையில் வைக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந் தலைவர் இரா.சம்பந்தன் எம்.பியின் புகழுடலுக்கு முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைவருமான மஹிந்த ராஜபக்ஷ எம்.பி. அஞ்சலி செலுத்தினார்.











# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## உச்சத்தில் ஊழல், மோசடி!

அதிக சட்டங்களை யாத்தோம் என்று பெருமை கொள்கின்றது ரணில் இந்த அரசு. சட்டங்களை உருவாக்கி, அவற்றைக் கறுப்பு - வெள்ளையில் சட்டப் புத்தகங்களாக்கி, அடுக்கி வைப்பதில் பயனில்லை. அவை சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். சட்டத்தின் ஆட்சி நிலவுவதுதான் முக்கியம்.

இது தொடர்பில் ரணில் அரசின் மற்றும் மோர் சீத்துவம் குறித்து தகவல் வெளியாகி இருக்கின்றது.

நாடு இன்று இத்தகைய மோசமான பொருளாதார நெருக்கடி நிலைமைக்கு வீழ்ச்சியடைந்தமைக்குப் பிரதான காரணம் நிதிக் கையள்கை முறைமைகளில் உள்ள தவறுகள்தான் என்பது வெள்ளிடைமலை.

ஊழல், மோசடி, லஞ்சம், நிதி விடயங்களில் பொறுப்பு கூறும் கடப்பாட்டின்மை போன்றவைதான் இந்தச் சீரழிவு நிலைக்குக் காரணம் என்பதும் வெளிப்படையானது.

நாடு தன் பொருளாதார நிலைமையை மேம்படுத்திக் கொள்வது என்றால் இந்த முறைகேடுகள் அடியோடு நீக்கப்பட வேண்டும் என இந்த நெருக்கடி சமயத்தில் இலங்கை நாட்டைப் பிணையெடுக்க முன்வந்த சர்வதேச நாணய நிதியம் வலியுறுத்தி இருந்தது. நிபந்தனை விதித்திருந்தது என்று கூறுவதும் பொருத்தமானதுதான்.

பொதுத்துறைகளில் ஊழல், மோசடிகளைத் தடுக்கும் விதத்தில் கடுமையான சட்டங்கள் வேண்டும் என்று நாணய நிதியம் வற்புறுத்தியமைக்கு அமைய சட்டங்கள் வந்துவிட்டன. ஆனால் அவை நடைமுறைக்கு வந்தமை குறித்து அசுமாத்தம் ஏதுமில்லை.

வெறும் ஏட்டுச்சுரைக்காயாக இத்தகைய சட்டங்கள் இருப்பதில் பயனில்லை. பொது நிதி விடயங்களில் கடுமையான கண்காணிப்பு, கட்டுப்பாடு, தவறுகளுக்கு தண்டனை உண்டு என்ற கருத்தியல் உணர்த்தப்பட்டதாகத் தெரியவில்லை.

சர்வதேச புள்ளி விவரம் ஒன்று இது பற்றிய உண்மை நிலையை அம்பலப்படுத்தி இருக்கின்றது.

ஊழல், மோசடிகள் குறைந்த நாடுகளின் தர வரிசையில் 2022 இல் 180 நாடுகள் கொண்ட பட்டியலில் 102 ஆவது இடத்தில் இருந்த இலங்கை, கடந்த ஆண்டில் - 2023 இல் - 13 இடங்களை மேலும் பின் தள்ளப்பட்டு 115 வது இடத்துக்கு வந்திருக்கின்றது.

அதாவது ஊழல், மோசடியில் 2022ஐ விட 2023 இல் அதிகம் முன்னேறி இருக்கின்றது இலங்கை. இதுதான் இலங்கை அரசின் நிர்வாகத்தின் சாதனை.

இந்தச் சாதனையை வைத்துக் கொண்டு நாடு பொருளாதாரத்தில் மீட்சி பெறும் - மீண்டெழும் - என்பவை எல்லாம் வெறும் கனவேயன்றி வேறில்லை என்பதை அடித்துக் கூற முடியும்.

‘பொது கொள்முதல் விடயங்களில் ஊழல், மோசடிகளை சட்டத்தின் மூலம் எதிர்கொண்டு போராடுதல்’ என்ற தலைப்பில் அண்மையில் கொழும்பில் நடைபெற்ற கருத்தரங்கிலேயே இந்த நிலைமை பற்றிய தகவல்கள் அம்பலமாகி இருக்கின்றன.

பொது நிதி விடயங்களில் ஊழல், மோசடி, முறைகேடுகளில் ஈடுபடுபவர்களைக் கண்டுபிடித்து, விசாரித்து, தண்டனை வேண்டிக் கொடுக்கும் நீதி முறையிலான பொறிமுறையோ அல்லது வழக்காறுகளோ நாட்டில் இல்லை.

தப்பித்தவறி சிக்குவோரும் கூட, பொறுப்புக் கூறலுக்கான இறுக்கமான சட்டங்கள், முறைமைகள் இல்லாமையினால் இலகுவாகத் தப்பி விடுகின்றனர். நீதிமன்ற விசாரணை முறைமை, கால தாமதம் போன்றவற்றாலும் இவ்விடயங்களில் சட்டம் தன் கடமையை - பொறுப்பை - முன்னெடுப்பது பெரும்பாலும் அருகி வருகின்றது. இவை எல்லாவற்றையும் தாண்டி யாரேனும் குற்றவாளிகளாகக் காணப்பட்டாலும் சொற்ப தண்டனையே வழங்கப்படுகின்றது.

அதனாலும், இத்தகையோரை பொது நிதி சம்பந்தபடுவதினின்றும் விலக்கி வைக்கும் விதத்தில் கறுப்புப் பட்டியலில் சேர்க்கும் முறைமை ஒன்று நாட்டில் இல்லாதமையாலும், நாட்டில் ஊழல், மோசடி, லஞ்சம் போன்ற நிதிச் சீர்கேடுகள் தாராளமாகத் தலைவிரித்தாடுகின்றன.

இந்தச் சீத்துவத்தில் அதிக சட்டங்களைக் கொண்டு வந்து நிறைவேற்றினோம் என்று பீற்றிக் கொண்டிருக்கின்றது ரணிலின் அரசு. நடைமுறைப்படுத்தப்படாத சட்டங்களினால் பயன் ஏது?

# மதவெறிச் செயற்பாட்டைக் கண்டித்து யாழில் போராட்டம்





(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளரின் மதவெறிச் செயற்பாட்டைக் கண்டித்தும் அவரைப் பதவி நீக்குமாறு வலியுறுத்தியும் யாழ்ப்பாணத்தில் இன்று கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இலங்கை சிவசேனை மற்றும் உருத்திர சேனை ஆகிய இரண்டு இந்து அமைப்புக்கள் இணைந்து யாழ்ப்பாணத்திலுள்ள வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாக இன்று காலை இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தன.

போராட்டத்தில் ஈடுபட்டோர், இந்துப் பாரம்பரிய மரபுகளை அழித்து சிவ பூமியை கிறிஸ்தவ பூமியாக்காதே, தமிழர் கல்வி, கலாசார, பண்பாடுகளை அழிக்காதே உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியவாறு கோஷங்களை எழுப்பினார்கள்.

இதன்போது போராட்டக்காரர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

"யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளராகப் புதிதாக நியமிக்கப்பட்டவர் தனது அலுவலகத்தில் இருந்த இந்துக் கடவுள்களின் படங்களை அகற்றியதனை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இங்கு மதவெறியைத் தூண்டும் வகையில் மதவெறித்தனமாகச் செயற்படுகின்ற இவரைப் போன்றவர்கள் உடனடியாக பதவி நீக்கப்பட வேண்டும் என்று ஆளுநரிடம் கோரிக்கை விடுத்திருந்தோம்.

ஆனால், ஆளுநர் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதனால் நாங்கள் போராட்டத்தை நடத்துகின்றோம். ஆகையினால் இனிமேலும் ஆளுநர் நடவடிக்கை எடுக்காதுவிட்டால் தொடர்ந்தும் போராட்டங்களை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளோம்." – என்றனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### அதிகாரப் பகிர்வுடன்...

அதற்காகச் சம்பந்தன் பல பணிகளைச் செய்துள்ளார் என்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, இரா.சம்பந்தனுக்கு நாம் செய்யக்கூடிய சிறந்த காரியம் அவரின் பணிகளை வெற்றிகரமாக செய்து முடிப்பதே என்றும் குறிப்பிட்டார்.

இரா.சம்பந்தன் எம்.பியின் மறைவு தொடர்பில் நாடாளுமன்றத்தில் இன்று விசேட உரையொன்றை நிகழ்த்தி இரங்கலைத் தெரிவித்தபோதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி,

"நான் இந்த உரையாற்றும்போது, அன்று என்னுடன் நாடாளுமன்றத்துக்கு வந்தவர்களில் எஞ்சியிருந்த எனது சகாக்களில் ஒருவரான நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் இப்போது எங்களுடன் இல்லை.

மிகவும் கடினமான காலகட்டங்களில் அவருடன் இணைந்து பணியாற்றும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவர் ஆற்றிய பங்களிப்பை நன்றியுடன் நினைவு கூர்கின்றேன். அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பிரதிநிதித்துவப்படுத்திய போதிலும், அவர் எப்போதும் இலங்கையின் ஆள்புல ஒருமைப்பாட்டுக்காகப் பங்காற்றினார்.

ஒருமுறை அவர் என்னுடன் உரையாற்றும்போது "ரணில், நான் நாட்டைப் பிரிப்பேன் என்று நினைக்கிறீர்களா? நான் சிறுவனாக இருந்த போது, 1948இல் நாடு சுதந்திரம் பெறுவதைப் பார்க்கச் சென்றிருந்தேன்" என்று அவர் என்னிடம் குறிப்பிட்டார். அதனைக் காணும் வாய்ப்பு எங்களுக்குக் கிடைக்கவில்லை. நம்மில் பலர் அப்போது பிறக்கவே இல்லை.

ஆனால், அதிகாரப் பகிர்வு தொடர்பில் அவர் தனித்துவமான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தார். அதைப் பற்றி விவாதம் செய்ய அவசியமில்லை. அவர் அதற்கான போதுமான பங்கைச் செய்துள்ளார் என்று நினைக்கின்றேன். அதனை நிறைவு செய்ய இன்னும் கொஞ்சம் பங்காற்ற வேண்டியுள்ளது. மேலும் அந்த வேலைகளை நிறைவு செய்வதே அவருக்கு செய்யக்கூடிய மிக உயர்ந்த பங்களிப்பாக இருக்கும்." – என்றார்.

இதையடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் உரையாற்றும்போது,

"சம்பந்தன் தொடர்பில் ஜனாதிபதியும் எதிர்க்கட்சித் தலைவரும் உணர்வுபூர்வமாக இங்கு தெரிவித்த கருத்துக்களுக்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தானும் சம்பந்தனும் 1977 இல் ஒன்றாக நாடாளுமன்றுக்குள் நுழைந்தார்கள் என்று ஜனாதிபதி கூறியமையை நாங்கள் செவிமடுத்தோம். சம்பந்தனின் ஆயுள் காலத்தில் தமிழர்களின் தேசிய இனப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதி திரும்பத் திரும்பக் கூறி வந்தார். துரதிஷ்டவசமாக சம்பந்தன் எம்மைப் பிரிந்து விட்டார். எனவே, ஜனாதிபதியின் இந்தப் பதவிக்காலம் இந்த ஒக்டோபரில் முடிவடைவதற்கு முன்னராவது இந்த விடயம் இந்த நாட்டில் வதியும் அனைத்து மக்களின் திருப்திக்கும் அமைவாகத் தீர்க்கப்பட வேண்டும் என்பதை ஜனாதிபதியிடமும் அரசிடமும் கோரிக்கையாக விடுகின்றேன்." – என்றார்.

### சம்பந்தனின் மறைவு...

பெருந்தலைவருமான இரா.சம்பந்தன் எம்.பியின் மறைவுக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இரங்கல் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி, ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நாட்டின் ஐக்கியம், ஆள்புல ஒருமைப்பாட்டுக்காகத் தொடர்ந்து முன்னிருந்த இரா. சம்பந்தனின் திடீர் மரணம் தொடர்பில் தனது கவலையைத் தெரிவிப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இன்று நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

"சம்பந்தனின் மரணம் எமது நாட்டுக்கும் மக்களுக்கும் பாரிய இழப்பாகும். அவர் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தேசியத் தலைவராகச் செயற்பட்டார்.

தேசியத்துவம் தொடர்பில் அவர் தொடர்ச்சியாகக் குரல் கொடுத்து வந்தார்.

அவர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இன, சமய, குல பேதமின்றி சகலரையும் ஒரே மாதிரியாக மதித்து பழகிய தலைவராவார்." – என்றார்.

# பிளவுபடாத நாட்டுக்குள் தீர்வைப் பெற முயற்சித்த தலைவர் சம்பந்தன் ஐயா!

## சித்தார்த்தன் எம்.பி. அஞ்சலி

தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட தலைவரும் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான இரா. சம்பந்தனின் மறைவுக்கு எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ் மக்களின் தேசிய இன விடுதலைப் போராட்டத்தில் மிக நீண்ட காலமாக செயற்பட்டு வந்த சம்பந்தன், தந்தை செல்வா முதல் இன்றைய தலைமுறையினர்வரை அனைத்துக் காலங்களிலும் கை கோர்த்துப் பயணித்த ஒரு தலைவராக திகழ்ந்தவர்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கன் சித்தார்த்தன் விடுத்துள்ள அஞ்சலிச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தேர்தல் அரசியலில் ஈடுபடும் வாய்ப்புகள் பல தடவைகள் தந்தை செல்வா மூலம் கிடைக்கப் பெற்றபோதும், சம்பந்தன் ஐயா அவற்றைத் தவிர்த்து வந்த அதேநேரம், தமிழ் மக்களால் நடத்தப்பட்ட அறவழிப் போராட்டங்கள் பலவற்றிலும் முன்னின்று போராடியிருந்தார்.

1961 ஆம் ஆண்டில் எனது தந்தையார் உள்ளிட்ட பல தமிழரசுக்கட்சித் தலைவர்களின் பங்குபற்றுதலுடன், தந்தை செல்வா அவர்களின் தலைமையில் நடைபெற்ற சத்தியாக்கிரகப் போராட்டத்திலேயே சம்பந்தன் அவர்களுடன் இணைந்து செயற்படும் வாய்ப்பு முதல் முதலாக எனக்கு கிடைத்தது. எனது தந்தையாருடன் அவருக்கிருந்த பலமான நட்புறவு காரணமாக எனக்கும் அவருக்குமான உறவு அன்றைய நாள் தொட்டு சிறப்பானதாகவே அமைந்திருந்தது.

ஆயுதப் போராட்ட அமைப்புகளாக எமது போராட்டப் பாதை மாறுபட்ட தடத்தில் சென்றபோதும் கூட அவருடனான நட்புறவு என்றும் தொடர்ந்திருந்தது.

1985 ஆம் ஆண்டு பூட்டான் தேசத்து திம்பு நகரில் தமிழ் அமைப்புகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையே நடைபெற்ற முதலாவது பேச்சின் போது, இராஜதந்திர ரீதியிலான பேச்சுக்களில் வெளிப்படுத்த வேண்டிய ஆளுமை நிறைந்த அணுகுமுறைகள் பற்றி அவரிடம் இருந்து பல்வேறு ஆலோசனைகளைப் பெற்றுக் கொண்டதை இன்று நினைத்துப் பார்க்கிறேன்.



அத்தகைய அவரது திறமை மற்றும் பண்பு, பின்வந்த காலங்களில், குறிப்பாக யுத்தத்தின் பின்னர் தமிழ்ச் சமூகத்தின் குரலாக, தென்னிலங்கை சமூகம் மற்றும் சர்வதேச சமூகத்தின் மத்தியில் அவர் அங்கீகாரம் பெறக் காரணமாயின.

தான் வரிந்து கொண்ட கொள்கைக்காக, எதிரிகளும் நிராகரிக்க முடியாத வகையில், ஆணித்தரமாக ஆளுமை நிறைந்த வகையில் வாதங்களை முன்வைப்பதற்கு அவர் என்றைக்கும் தயக்கம் காட்டியதில்லை. சக நாடாளுமன்ற உறுப்பினராக பல தடவைகளில் நான் அதனை கண்டுணர்ந்திருக்கிறேன்.

பொது வெளியிலும், ஊடகங்களுடனான செவ்விகளிலும் கருத்துகளை வெளிப்படுத்தும்போது, நிதானமான அவருடைய சொல்லாடல்கள் மற்றும் கருத்துப் பகிர்வுகள், அரசியல் பரப்பில் இயங்குகின்ற அனைவரும் அறிந்து கொள்ள வேண்டிய முன்னுதாரணமான பண்பாகும்.

எவருடனும் சரி, எக்காலத்திலும் சரி, பேச்சுக்களை முன்னெடுக்கும்போது, பேச்சுக்கள் முடிவுக்கு அல்லது முறிவுக்கு வரும்வரை நம்பிக்கையுடன் பயணிப்பதே தலைமைத்துவத்தின் பண்பாக இருக்க வேண்டும் எனக்கூறி, அதனை உறுதியாக கடைப்பிடித்ததன் காரணமாக பல்வேறுபட்ட விமர்சனங்களுக்கு முகம் கொடுத்திருந்தார்.

தனது வாழ்வின் இறுதிவரை, தந்தை செல்வா முன்மொழிந்த சமஷ்டித் தீர்வுக் கொள்கையில் பற்றுக்கொண்டு, பிளவுபடாத நாட்டுக்குள் தீர்வைப் பெற முயற்சித்த சம்பந்தன் அவர்களின் மறைவு தமிழினத்துக்கும் தேசிய இனப் பிரச்சினை இந்த நாட்டில் இன்னமும் உண்டு என நம்புகின்ற சிங்கள முஸ்லீம் சமூக சக்திகளுக்கும் கவலையை ஏற்படுத்தும் என்பதை மறுக்க முடியாது.

தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குள் முரண்பாடுகள் உச்சம் பெற்றுவிட்ட வேளையில், அதன் பிளவை தடுக்க முடியாதா எனும் கவலையுடனும் காணப்பட்ட அவர், கட்சிக்குள் தனக்கிருந்த அதிகாரங்களைக் கொண்டு அவசியமான கருமங்களை ஆற்றி, முன்னமே கூட்டமைப்பின் முரண்பாடுகளை சீர் செய்து பிளவினைத் தடுக்கத் தவறியிருந்தமை அவரது நீண்ட அரசியல் வாழ்வின் இறுதிக் காலங்களை கறைபடிந்ததாக்கி விட்டமை துயர் தரும் விடயமாகியுள்ளது.

அவரது நீண்டகால வாழ்வின் அடிப்படையான அரசியல் அபிலாசைகள், கனவுகள் மெய்ப்பட வேண்டுமெனில், அதற்கான பயணத்தில், சக தமிழ் அமைப்புகளுடன் இணைந்து பயணிக்க அவர் வழி நடாத்திய தமிழரசுக் கட்சிஇன்று தங்களுக்குள் இருக்கும் வேறுபாடுகளைக் களைந்து ஒன்றுபட்டு முன்வருவதே அவருக்கான ஆழமான அஞ்சலியாக இருக்க முடியும்.

அவரது இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர், உறவினர்கள், ஆதரவாளர்களுக்கு எனது ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.– என்றுள்ளது.



# சர்வதேசம் மதிக்கத்தக்க தலைவர்களில் ஒருவராக இருந்தவர்தான் சம்மந்தன் ஐயா

## சமத்துவக் கட்சி இரங்கலில் தெரிவிப்பு

இனவாதக் கொந்தளிப்பால் அழிந்து கொண்டிருக்கும் இலங்கைத் தீவை மீட்டெடுப்பதற்கு சமாதானமும் நீதியான முறையில் பல்லின சமத்துவமும் நிலை நிறுத்தப்பட வேண்டும் என்பதை வலி யுறுத்திச் செயலாற்றிய மூத்த அரசியல் தலைவர் இரா. சம்மந்தன் அவர்களு டைய மறைவு நாட்டுக்குப் பேரிழப்பாகும்.

இந்த வெற்றிடத்தை நிரப்புவது இன்றைய சூழ்நிலையில் மிகக் கடின மானதாகும்.

சம்மந்தன் அவர்களுடைய மறைவு நாட்டில் அமைதியையும் நீதியான தீர் வையும் எட்ட விரும்பும் அனைவருக்கும் ஏற்பட்டுள்ள பேரிழப்பாகும். இந்த இழப்பை ஆழமாகச் சமத்துவக் கட்சி உணர்ந்து கொண்டு, மறைந்த தலைவர் சம்மந்தன் அவர்களுக்கு தன்னுடைய அஞ்சலியை செலுத்துகிறது என அந்தக் கட்சியின் தலைவர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

சமந்தன் அவர்களின் மறைவுக்கு அவர் விடுத்துள்ள இரங்கற் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

இனப்பிரச்சினைக்கு ஐக்கிய இலங்கைக்குள் நீதியான தீர்வொன்றை எட்ட வேண்டும் எனத் தன்னுடைய இறுதி மூச்சுவரையிலும் உறுதியாக இருந்தவர் சம்மந்தன். இதற்காக அவர் தன்னுடைய கட்சிக்குள்ளும் வெளியி லும் கடுமையான எதிர்ப்புகள், விமர்ச னங்கள், சர்ச்சைகளை எதிர்கொண்டி ருந்தார். எனிலும் சமாதானத்திலும் ஐக்கியத்திலும் அமைதித்தீர்விலும் கொண்டிருந்த ஆர்வத்தைக் குறைத்த தில்லை. இத்தகைய பெறுமானத்தைக் கொண்ட தலைவரின் இழப்பை சமத்து வக் கட்சி ஆழமாக உணர்ந்து கொண்டு, சம்மந்தன் அவர்களுக்குத் தன்னுடைய அஞ்சலியை செலுத்துகிறது.

இலங்கைத் தீவில் அமைதியை வலியுறுத்தித் தொடர்ந்து செயற்பட்ட மூத்த அரசியல் தலைவர் இரா. சம்மந் தன் அவர்கள். ஒடுக்கப்பட்ட இன மொன்றின் அரசியல் தலைமையை, அதனுடைய நீண்ட விடுதலை அரசியற் போராட்டத்தின், போரின் பின் ஏற்றுச் செயற்படுவது எளிதானதல்ல. அதிலும் போரில் தோற்கடிக்கப்பட்ட தரப்பாகத் தமிழர்கள் இருந்த நிலையில், அதற்குத் தலைமைப் பொறுப்பை வகிக்கும் வரலாற்றுச் சூழல் சம்மந்தன் அவர்க ளுக்கு அமைந்தது. இது மிகச் சிக்கலான ஒரு நிலையாகும்.

இந்த நிலையில் தன்னால் முடிந்த அளவுக்கு விட்டுக் கொடுப்புகளைச் செய்து சிங்களத் தரப்பினரோடு கைகோர்த்து அமைதித் தீர்வை எட்டுவதற்கு முயற்சித்தார். ஆனாலும் அவருடைய முயற்சிகள் தோற்கடிக்கப் பட்டன. இதன்மூலம் சம்மந்தனோ அவருடைய வழிமுறையோ ஒருபோதும் தோற்கடிக்கப்படவில்லை.

வரலாற்றில் அதற்கான இடம் நிச்ச யமாக இருந்தே தீரும். அமைதிக்கு எதிராகச் சிந்திப்போரும் செயற்படுவோ ருமே வரலாற்றில் தோற்கடிக்கப்பட் டோராக இருப்பர்.

அறுபது ஆண்டுக்கும் மேலான சம்மந்தன் அவர்களுடைய அரசியல் பயணம் நெருக்கடிகள், சர்ச்சைகள், எதிர்ப்புகளின் மத்தியிலேயே நிகழ்ந்தது.

அவருடைய அரசியல் நிலைப்பாட் டுக்காகச் சிங்கள இனவாதிகளினாலும் தீவிரத் தமிழ்த்தேசியவாதிகளாலும் மிகமோசமாகவிமர்சிக்கப்பட்டிருக்கிறார். இதொரு விநோதமான நிலையாகும். அமைதியையும் சமாதானத்தையும் விரும்பும்போது இணக்கப்பாட்டையே கடைப்பிடிக்க வேண்டியிருக்கும். இன வாதம் என்பது இணக்கப்பாட்டுக்கு எதி ரானது என்பதால் இரண்டு தீவிரத் தேசியவாதத்துக்கும் (இனவாதத்துக்கு) எதிராக நின்று தாக்குப் பிடிக்க வேண்டிய வரலாற்று நிர்ப்பத்தத்தை ஏற்க வேண் டிய நிலை சம்மந்தனுக்கு ஏற்பட்டது.

அந்த நிர்ப்பந்தத்தை அவர் தன்னுடைய முதிய வயதிலும் ஏற்று நின்றதனாலேயே அவருக்கு ஜனநாயக சக்திகளிடத்திலும் முற்போக்காளரி டத்திலும் மதிப்பும் ஆதரவும் கிடைத்தது. இதுவே அவர் சர்வதேச சமூகத்தின் மதிப்பையும் ஆதரவைப் பெற்றுக்கொள் வதற்கும் காரணமாக அமைந்திருந்தது.

மாறிவரும் சர்வதேசச் சூழலையும் உள்நாட்டு நிலவரங்களையும் நன்றாக உணர்ந்தறிந்திருந்தவர் சம்மந்தன். அதன்வழியே தமிழ் மக்களுடைய அரசியலை முன்னெடுக்க முயன்றவர்.

வன்முறைக்கும் ஒடுக்குமுறைக்கும் எதிரான தன்னுடைய நிலைப்பாட்டிலி ருந்து அவர் ஒருபோதும் விலகவோ தளரவோ இல்லை. ஐக்கிய இலங்கைக் குள் அனைத்துச் சமூகத்தினருக்கும் சமனிலையான அதிகாரமும் உரிமை யும் கிடைக்கக்கூடிய அரசியல் தீர்வு வேண்டும் என்பதில் இறுதிவரை உறுதி யாக இருந்தார். இதனால் அவர் இலங் கைத்தீவின் தலைவர்களில் ஒருவராக இனமத பேதங்கடந்து அடையாளம் காணப்பட்டிருந்தார். அவருடைய இந்த வழிமுறை தொடரப்பட வேண்டும். அதுவே அவருக்கு இந்த நாட்டு மக்களும் குறிப்பாகத் தமிழ்ச்சமூகமும் செலுத்தும் மதிப்பார்ந்த மரியாதையாக இருக்கும். சம்மந்தன் இழந்து நிற்கும் மக்க ளுக்கும் அவருடைய சக அரசியல் பயணிகளுக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆறுதல்கள் தெரிவித்துக்கொள் கின்றேன்.- என்றுள்ளது.

# ஒப்பாரும் மிக்காரும் இன்றித் திகழ்ந்த தலைவரைத் தமிழினம் இழந்து நிற்கிறது

## அகில இலங்கை இந்துமாமன்றம் இரங்கல்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இராஜ வரோதயம் சம்பந்தன் மறைந்த செய்தி கேட்டு அகில இலங்கை இந்து மாமன் றத்தின் அஞ்சலிச் செய்தியை இலங்கை வாழ் இந்துக்கள் சார்பில் வழங்கு கிறோம்.

திருகோணமலையைப் பிறப்பிட மாகக் கொண்ட அவர் பிரபல சட்டத் தரணியாகத் தொழிலை ஆரம்பித்தார். ஆணித்தரமாக சிங்கக்குரலில் அவர் கர்ஜிக்கும் குரலைக் கேட்கவும் வழக் காடும் திறமையை இரசிக்கவும் நீதி மன்றத்துக்கு வருபவர்கள் எனப் பலர் இருந்தனர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குச் சார்பாக இருந்த அவர் ஆரம்பத்தில் நாடாளுமன்றம் வருவதற்கு விரும்ப வில்லை. எனினும் தொடர்ந்த வற்புறுத் தல்களால் 1977இல் இவர் திருகோ ணமலைத் தொகுதியில் போட்டியிட்டுப் நாடாளுமன்றத்துக்குத் தெரிவா னார்.

கட்சியின் அரசியல் நிலைப்பாட்டால் 1983 தொடக்கம் 1987 வரையுள்ள காலத்தைத் தவிர தனது அந்திமக் காலம்வரை திருகோணமலையைப் பிரதிநிதிப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தார்.

நாடாளுமன்றத்தின் மூத்த உறுப்பி னராகவும் 2015 தொடக்கம் 2018 வரை எதிர்க்கட்சித் தலைவராகவும் இருந்த அவர் தனது அரசியல் சாணக் கியத்தால் உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் பல பிரபலங்களின் நட்புக்குப் பாத்திரமாக விளங்கியது மாத்திரமன்றித் தீவிரவாதப் போக்குடையவர்களுக்கும் இலங்கை அரசியலில் ஒரு இன்றிய மையாதவராகத் திகழ்ந்தார்.

இவ்வாறு ஒப்பாரும் மிக்காரும் இன்றித் திகழ்ந்த தலைவரைத் தமிழினம் இழந்து நிற்கிறது.

அன்னாரை இழந்து நிற்கும் குடும் பத்தினர், அரசியல் நண்பர்கள். உறவினர்களது சோகத்தில் அகில இலங்கை இந்து மாமன்றமும் பங்கு கொள்கின்றது.

# சம்பந்தனின் இழப்பு ஈடு செய்ய முடியாதது!

## ஈரோஸ் ஜனநாயக முன்னணி அனுதாபம்!

இரா.சம்பந்தனது இழப்பு தமிழ் பேசும் சமுதாயத்தின் தீர்ஜவு மேலும் தாமதமாக்கும் என ஈரோஸ் ஜனநாயக முன்னணியின் பொதுச் செயலாளர் இரா.ஜீவன் இராஜேந்திரன் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முதுநிலைத் தலைவராகவும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகவும் விளங்கிய இரா.சம்பந்தனது இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருடனும் அவரது கட்சி உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்களுடனும் ஈரோஸ் ஜனநாயக முன்னணியானது தனது துயரினைப் பகிர்கின்றது.

எமது மக்களது விடுதலைப் போராட்டமானது இன ரீதியான முனைப்புக் கொண்டபோது போராட்ட விடுதலை அமைப்புகளும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் தமிழகத்திலே தமது தளங்களை அமைத்துச் செயற்பட்ட போதிலிருந்து இரா. சம்பந்தன் ஈரோஸ் அமைப்புடன் தொடர்புகளைப் பேணியவர்.

1987 ஆம் ஆண்டு இந்திய இலங்கை உடன்படிக்கையின் பின்னர் 1989 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலிலே ஈரோஸ் போட்டியிட்ட போது தமிழர் விடுதலைக் கூட்டணியில் இரா.சம்பந்தன் திருக்கோணமலை மாவட்டத்தில் போட்டியிட்டிருந்தார்.

அத்தேர்தலின் போது அவர் ஈரோஸ் அமைப்புடன் நெருங்கிய உறவினைப் பேணியிருந்தார் என்பதனை இவ்விடத்தில் நினைவு கூருகின்றோம்.

பௌத்த, சிங்கள இனவாத அரசுகள் தொடர்ந்தும் தமிழ்பேசும் சமுதாயங்களின் சிக்கல்களுக்குத் தீர்வை வழங்க முன்வராத நிலையில் “என்னவகையிலான விட்டுக் கொடுப்புகளையாவது செய்து இனமுரண் நிலைக்கான தீர்வினை எய்துவதற்காக உழைத்த தலைவராக” இரா.சம்பந்தனை ஈரோஸ் ஜனநாயக முன்னணி பார்க்கின்றது.

ஈரோஸ் ஜனநாயக முன்னணியானது ஸ்ரீலங்காவின் அரசியல் கட்சியாக பதிவு செய்யப்பட்ட பின்னர், இரா.சம்பந்தனுடன் இந்த நாட்டிலுள்ள இனமுரண் நிலைக்கான தீர்வுகள் குறித்துப் பேசுவதற்கான தயார்ப்படுத்தல்களை நாம் செய்து கொண்டிருந்த வேளையில் அவரது இழப்புச் செய்தி எம்மையும் கவலை கொள்ளச் செய்கின்றது.

1989 ஆம் ஆண்டுத் தேர்தலிலே ஈரோஸ் அமைப்பானது திருகோணமலை மாவட்டத்தில் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களை பெற்றுக் கொண்டது.

இதன்போது இரா.சம்பந்தன் அத்தேர்தலில் நாடாளுமன்றத்திற்குத் தெரிவாகவில்லையெனினும் ஈரோசுடன் நெருங்கிய உறவைப் பேணிவந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

2000 ஆண்டுகளின் பின்னர் தொடர்ச்சியாக திருகோணமலை மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினராக நாடாளுமன்றத்துக்குச் சென்றதன் மூலமாக திருகோணமலை மாவட்ட மக்களின் ஆதரவையும் அன்பையும் பெற்றவராக இரா.சம்பந்தன் விளங்கினார்.

யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் இலங்கை அரசின் கபடத்தனங்களை உலகுக்கு வெளிப்படுத்திய தலைவராக இரா.சம்பந்தன் விளங்குகின்றார்.

“மேம்பாடுகள் நமது மக்களது கையிலுள்ள அதிகாரத்தின் மூலமாகச் செய்யப்பட வேண்டுமேயொழிய இலங்கை அரசு தருகின்ற சலுகைகள் மூலமாக இல்லை” என்ற கருத்தினடிப்படையில் பல தடவைகள் ஆட்சியில் பங்கேற்பதற்கான அழைப்புகளை நிராகரித்து தமிழ் மக்களின் உரிமைகளுக்காக தன் நிலை இழக்காத தலைவராக இரா.சம்பந்தனை ஈரோஸ் ஜனநாயக முன்னணி பார்க்கின்றது. அவரது மறைவின் மூலமாக துயருற் றிருக்ககும் அவரது உறவினர்கள், அவரது கட்சி உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்களுடன் நாமும் எமது துயரை மீண்டும் பகிர்கின்றோம்.- என்றுள்ளது.

# சிறுபான்மை மக்களுக்காக குரல் கொடுத்த தலைவரை நாம் இன்று இழந்திருக்கிறோம்

## சிராஸ் மீராசாஹீப் கவலை

தமிழ் தேசிய கூட்டமைப்பின் சிரேஷ்ட தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 14 ஆவது எதிர்க்கட்சித் தலைவருமான சட்டத்தரணி இ. சம்பந்தன் ஐயாவின் மறைவுச் செய்து அறிந்து கவலை அடைகிறேன் என்று கல்முனை மாநகர முன்னாள் முதல்வரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சர்வதேச விவகாரங்கள் பணிப்பாளருமான கலாநிதி சிராஸ் மீராசாஹீப் தெரிவித்துள்ளார். சுமார் ஐந்து தசப்த அரசியல் வர லாற்றில் மிகநீண்ட காலம் தமிழ் மக் களின் உரிமைக் குரலாகவும், இலங்கை நாடாளுமன்றத்தில் மட்டுமல்ல சர்வதேச ரீதியிலும் செயற்பட்ட ஒரு தலைவராகச் சம்பந்தன் காணப்பட்டார்.

இன, மத வேறுபாடுகளுக்கப்பால் இன நல்லிணக்கத்துக்காக நாட்டு மக்களின் நன்மை கருதி செயற்பட்ட ஒருவராக அவர் திகழ்ந்தார்.சிறுபான்மை மக்களுக்காக எப்பொழுதும் குரல் கொடுக்கும் ஒரு தலைவரை நாம் இன்று இழுந்திருக்கிறோம்.

அன்னாரின் பிரிவால் மீள துயரில் இருக்கும் குடும்பத்தினர் உற்றார் உறவினர் மற்றும் ஏனைய அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறேன் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



# சம்பந்தன் ஐயாவின் இழப்பு பெரும் துயரத்தை ஏற்படுத்தியது

## தௌபீக் எம்.பி. தெரிவிப்பு



இலங்கை தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட தலைவரும், முன்னாள் எதிர்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன் ஐயாவின் மறைவானது அவரது குடும்பத்துக்கு மட்டுமன்றி எம் அனைவருக்கும் பெருந்துயரை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ் மக்களின் உரிமைக்காகவும் முன்னேற்றத்திற்காகவும் தன்னை முழுமை அற்ப்பணித்தவர் சம்பந்தன் ஐயா.

திருகோணமலை மாவட்ட நாடா ளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக் அவரது இரங்கல் செய்தியில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

எமது நாட்டில் தமிழ் சமூகம் எதிர் நோக்கிய இனரீதியான அதிகார ரீதியிலான பல்வேறு நெருக்கடிக்கடிகளின் போது இராஜதந்திர ரீதியாகப் பல்வேறு நகர்வுகளை மேற்கொண்டு அந்த மக்களுக்கு முடியுமான அனைத்து தீர்வுகளையும் பெற்றுக்கொடுத்தவர். தமிழ் – முஸ்லிம் அரசியல் தலைமைகள் ஒற்றுமையுடன் செயற்பட்டால்தான் சிறுபான்மை மக்களின் உரிமைகளை வென்றெடுக்க முடியும் என்று நிருபித்துக் காட்டிய தலைவர் சம்பந்தன் ஐயா.

அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களை முஸ்லிம் மக்கள் சார்பாகத் தெரிவித்துக் கொள்கின்றேன்.–என்று தெரிவித்துள்ளார்.

# தமிழ் தேசியம் விலை போகாமல் பாதுகாத்த பெருந்தலைவர் சம்பந்தன்

## மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் அஞ்சலி



தமிழ் தேசிய அரசியலை கெடுபிடிகளுக்குள் இருந்து பாதுகாத்து, சர்வதேச மயப்படுத்திய மிகச்சிறந்த மிதவாத தலைவர் சம்பந்தன் ஐயா என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

சம்பந்தன் ஐயாவின் மறைவையிட்டு அவர் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

விடுதலை அரசியலில் சிறுபான்மைச் சமூகங்களை சமபார்வையுடன் நோக்கிய தலைவர் சம்பந்தன் ஐயா. நீண்ட அரசியல் வரலாற்றனுபவமுள்ள இவர், தமிழ் தேசிய அரசியலை மிகச்சாதுர்யமாக வழிநடத்தினார்.

ஜனநாயகத்தின் மீது அவருக்கிருந்த நம்பிக்கையால், கெடுபிடியான காலங்களில்கூட தமிழ்த்தேசிய அரசியல் விலைபோகாமல் பாதுகாக்கப்பட்டது. 90 வயதைக் கடந்திருந்தாலும் தீர்வைப் பெற வேண்டும் என்ற திடகாத்திரம் அவருக்கிருந்தது.

ஒரே வாழிடத்தில் ஒரே மொழி பேசுவோராக வாழ்ந்த சிறுபான்மைச் சமூகங்களை, சம பார்வையில் நோக்கிய பெருந்தகையும் இவர்தான். தமிழ், முஸ்லிம் முரண்பாடுகள் ஒரு மொழித் தேசியத்தை (தமிழ்) சிதைக்கக் கூடா தென்பதற்காக முஸ்லிம் தலைமைகளுடன் நல்லுறவைப் பேணி வந்தார்.

இன்று வரைக்கும் தீர்க்கப்படாதுள்ள தமிழ், முஸ்லிம் அபிப்பிராய பேதங்களைப் போக்குவதற்கு சம்பந்தன் போன்ற தலைமைகளே அவசியம்.

காலம் சென்ற சம்பந்தன் ஐயாவின் கடந்தகால வரலாறுகளிலிருந்து ஒற்றுமைக்கான பல படிப்பினைகளை நான் காண்கிறேன். இவரது வழிகாட்டல்களில் சமாதானத்துக்கான கதவுகள் திறந்தேயிருந்தன. உரிமை அரசியல் விலைபோகக் கூடாது என்பதற்காக தனக்கு வந்த அரிய பல வாய்ப்புக் களையும் அவர் தியாகம் செய்திருந்தார்.

இனிவருங்காலங்களில் தென்னிலங்கை அரசியலில் ஏற்படப் போகும் மாற்றங்கள் மற்றும் தாக்கங் களிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கு தீட்சண்யமான தலைமை தமிழருக்கு அவசியம். இந்தத் தலைமைகளுடன் தான் முஸ்லிம் தலைமைகளும் இணக்கப்பாட்டுக்கு வர முடியும்.

அன்னாரின் இழப்பால் துயருறும் சகலருக்கும் ஆண்டவனின் அருட் கடாட்சம் கிடைக்கட்டும்”.– என்றுள்ளது.

# சம்பந்தன் ஐயாவின் இலட்சியம் கைகூட இதய சுத்தியோடு ஒன்றுபட்டு உழைப்போம்

## கனடா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவிப்பு

ஒன்றுபட்ட இலங்கைக்குள் ஒரு தன்னாட்சி தமிழரசை உருவாக்க வேண்டும் என்ற சம்பந்தன் ஐயாவின் இலட்சியம் கைகூட இதய சுத்தியோடு உழைப்போம்.

இவ்வாறு கனடா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சம்பந்தன் ஐயாவின் மறைவை அடுத்து விடுத்துள்ள இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளது.

அந்த இரங்கல் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஆறு சகாப்தங்களுக்கு மேலாக ஓயாது ஒழியாது தமிழ் மக்களின் உரிமைகளுக்காக நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் போராடிவந்த சம்பந்தன் ஐயாவின் குரல் ஓய்ந்து விட்டது. கடந்த சில ஆண்டுகளாக அவ ரது உடல்நலம் குறைந்து காணப்பட் டாலும் அவரது குரலில் தளர்ச்சி இருக்கவில்லை.

சம்பந்தன் ஐயா தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவர்களான தந்தை செல்வநாயகம், அமிர்தலிங்கம் போன் றோர் வழியில் அவர்கள் விட்டுச் சென்ற பணியைத் திறம்படச் செய்தவர். தமிழரசுக் கட்சியுடன் ஆன அவரது தொடர்பு 1961 ஆம் ஆண்டு நடந்த சத்தியாக்கிரகப் போராட்டத்தோடு தொடங்கியது. அவர் கைது செய்யப்பட்டு பனாக்கொடை தடுப்பு முகாமில் சிறிது காலம் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

அவரது முழுநேர அரசியல் நுழைவு 1977 ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் திருகோணமலையில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பாக போட்டி யிட்டு வென்றதன் வாயிலாகத் தொடங் கியது.

1983 கறுப்பு ஜுலையில் மூவாயிரத் துக்கும் அதிகமான தமிழர்கள் படு கொலை செய்யப்பட்டதற்கும், அவர்க ளது உடைமைகள் சேதமாக்கப்பட்ட தற்கும் எதிர்ப்புத் தெரிவித்தும் தனி நாடு கோருவதை தடைசெய்தும் கொண்டு வரப்பட்ட இலங்கை அரசி யலமைப்பின் ஆறாவது திருத்தச் சட் டத்தின் கீழ் நாடாளுமன்றத்தில் உறுதிமொழி எடுக்க மறுத்து அதன் அமர்வுகளை மூன்று மாதங்கள் தொடர்ந்து புறக்கணித்ததன் விளைவாக சம்பந்தன் ஐயா தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை 1983, செப்டம்பர் 7 இல் இழந்தார்.

1985 ஆம் ஆண்டு திம்புவில் நடந்த அனைத்துக் கட்சி மாநாட்டில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பாக பங்குபற் றிய மூன்று முக்கிய தலைவர்களில் சம்பந்தன் ஐயாவும் ஒருவர்.

1987 இல் நிறைவேற்றப்பட்ட 13 சட்ட திருத்தத்தில் உள்ள குறைபாடுகள் பற்றி அப்போது இந்தியாவின் பிரதமராக இருந்த இராசீவ் காந்தி அவர்களுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி 28 ஒக்தோபர், 1987 ஒரு நீண்ட கடிதம் எழுதியது. அந்தக் கடிதத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர் மு. சிவசிதம்பரம், பொதுச் செயலாளர் அ. அமிர்தலிங்கம் மற்றும் துணைத் தலைவர் இரா.சம்பந்தன் கையெ முத்திட்டிருந்தனர்.

2015 செப்ரெம்பர் 3 முதல் 2018 டிசெம்பர் 18 வரைஇலங்கை நாடாளு மன்றத்தின் எதிர்க்கட்சித்தலைவராகவும் சம்பந்தன் ஐயா இருந்துள்ளார். எதிர்க் கட்சித்தலைவராக விளங்கியஅவர், தந்தை செல்வநாயகம், தளபதி அமிர்தலிங்கம்ஆகியோருக்கு அடுத்து, தென்னிலங்கை அரசியல்தலைவர்க ளாலும் வெளிநாட்டு இராசதந்திரிக ளாலும் பெரிதும் மதிக்கப்பட்டதமிழ் மக்களின் ஆளுமைமிக்க தலைவராக விளங்கினார்.

2009 மே 18 இல் போர்முடிந்த கையோடு பயங்கரவாதத்தை 'ஒழித்துக் கட்டிய' சிறிலங்கா அரசைப் பாராட்டி மே 27 இல் இந்தியா கொண்டுவரப்பட்ட தீர்மானம் 29 நாடுகள் ஆதரவாகவும் 12 நாடுகள் எதிராகவும் வாக்களித்து ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை பேர வையில் நிறைவேற்றப்பட்டது. 2011 ஆம் ஆண்டுவரை ஐ.நா.ம.உ. பேரவை இலங்கை அரசை ஆதரித்தே தீர்மா னங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்தப் போக்கு 2011 ஆம் ஆண்டுவரை நீடித்தது. அதை மாற்றி அமைத்தவர் சம்பந்தன் ஐயா அவர்கள். அந்த ஆண்டு ஒக்தோபர் மாதக் கடைசி யில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தூதுக்குழு ஒன்று சம்பந்தன் ஐயா தலைமையில் அமெரிக்கா சென்று வெளியுறவு அமைச்சு அதிகாரிகளோடு இரண்டு நாட்கள் தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்தியது. அதன் பின்னரே 2012 ஆம் ஆண்டு தொடக்கம் ஐநாமஉ பேரவையில் இலங்கை அரசுக்கு எதிரான தீர்மானங்கள் அடுத்தடுத்து அமெரிக்காவாலும் அதன் நட்பு நாடுகளாலும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இவ்வாறு ஈழம்வாழ் தமிழ்மக்களுக்கு எதிரான மனிதவுரிமை மீறல்கள், போர்க்குற்ற விசாரணைகள், பொறுப் புக்கூறல்கள், மீள்நல்லிணக்க முயற்சி கள் இன்று பேசுபொருளாக மாறி யுள்ளது. அந்தப் பெருமை சம்பந்தன் ஐயாவின் சாணக்கிய அரசியலையே சாரும்.

"முழுமையான உள்ளக சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படாவிட்டால் அதற்கு மாற்றீடாக நாங்கள் வெளியக சுயநிர்ணய உரிமையைக் கோருவோம். ஆகையால் நாட்டின் நன்மை கருதி – நாட்டில் வாழ்கின்ற மக்களின் நன்மை கருதி – தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளைக் கருதி பெரும்பான்மை சிங்களத் தலைவர்கள் நல்ல முடிவை எடுக்க வேண்டும். புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும், தமிழ் மக்களின் வேட்கைகள் ஏற்றுக் கொள் எப்பட வேண்டும், வடக்கு – கிழக்கில் வரலாற்று ரீதியாகத் தமிழ்பேசும் மக்கள் வாழ்ந்து வந்தார்கள் என்ற அடிப்படையில் அதியுச்ச அதிகாரப் பகிர்வு வழங்கப்பட வேண்டும்" என்பன சம்பந்தன் ஐயாவின் பெருவிருப்பாக கடைசிவரை இருந்தது.

தமிழ்மக்கள் இழந்த அடிப்படை உரிமைகளை வென்றெடுக்க, இணைப் பாட்சி அரசியல்முறைமையின் கீழ் தமிழ்மக்களின் வரலாற்றுத் தாயக பூமியில் ஒன்றுபட்ட இலங்கைக்குள் இணைப்பாட்சி கட்டமைப்பின் கீழ் ஒரு தன்னாட்சி தமிழரசை உருவாக்க வேண்டும் என்ற சம்பந்தன் ஐயாவின் இலட்சியம் கைகூட இதய சுத்தியோடு உழைப்பதே அவருக்கு நாம் செய்யும் கைமாறாகும். சம்பந்தன் ஐயாவின் பிரிவினால் வாடும் அவரது ', மகன் கள், மகள் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்களுக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கி றோம்.–என்றுள்ளது.




# தமிழ் சமூகத்தின் உரிமைகள் மற்றும் அபிலாஷைகளுக்கு வாதாடும் வல்லமை மிக்க சக்தியாக மாறியது கூட்டமைப்பு!

## சம்பந்தரின் இரங்கல் செய்தியில் அலி சாஹிர் மௌலானா தெரிவிப்பு!

அமரர் இரா.சம்பந்தன் தனது வாழ்வு முழுவதையும் இலங்கையில் உள்ள தமிழ் மக்களது நீதி, சமத்துவம் மற்றும் அமைதிக்காகவும் அதற்கான தீர்வினை நோக்கியும் அயராது முயற்சித்து அதற்காக தன்னை இறுதி மூச்சு வரை அர்ப்பணித்தவர்.

முஸ்லீம் காங்கிரஸின் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் அலிஸ ாஹிர் மௌலானா வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழ் சமூகத்துக்காக மட்டும் அல்லாது இலங்கையின் அனைத்து மக்களிற்காகவும் தனது அரசியல் கருத்துக்களை வழங்கி மிகவும் அர்ப்பணத்துடன் ஈடுபட்ட இரா. சம்பந்தன் தமிழ் மக்களின் உரிமைக்காக தன்னலமற்ற நேர்மையான நேரான பார்வையுடனும், அர்ப்பணிப்புடனும் ஜனநாயக வழியில் போராடினார் என்றால் மிகையாகாது.

இரா.சம்பந்தனின் பங்களிப்புகள் அரசியலுக்கு அப்பாற்பட்டவை, அவர் சமகால அரசியல் தலைவர்களுக்குள் ஓர் ஒளிவிளக்காகவும், அவர்களை எல்லாம் ஊக்குவிக்கின்ற தலைமைப் பண்புகளையும் பெற்றிருந்தார்.

சகோதர வாஞ்சையுடன் தமிழ் பேசும் மக்களது சமாதான சகவாழ்வுக்காகவும், அவர்களது நலன்களுக்காகவும் புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்காக அசைக்க முடியாத நம்பிக்கையுடனும், தளராத அர்ப்பணிப்புடனும் அவர் காட்டிச் சென்றுள்ள வழிமுறைகள் சமகால இலங்கையின் அரசியல் வரலாற்று ஏடுகளில், வரலாறு படைத்த நாயகர் வரிசையில் பதிவு செய்யப்பட வேண்டிய முக்கிய அம்சமாக அமையும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

ஜனநாயகம், மனித உரிமைகள், நல்லிணக்கம் ஆகிய கொள்கைகளில் அவர் கொண்டிருந்த அசைக்க முடியாத அர்ப்பணிப்பு நம் தேசத்தில் அழியாத முத்திரையை பதித்துள்ளது. அவர் தமிழ் மக்களின் நலனுக்காக கடமை உணர்வுடனும் கருணையுடனும் கண்ணியத்துடனும் போராடினார்,



நண்பர்களிடம் இருந்து மட்டுமல்ல. அரசியல் ரீதியாக மாற்றுக்கருத்துக்களுடன் எதிர்த்தவர்கள் மத்தியிலும் மரியாதையைப் பெற்ற ஒருவராகவே அவர் திகழ்ந்தார்.

அவரது தலைமையின் கீழ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் சமூகத்தின் உரிமைகள் மற்றும் அபிலாஷைகளுக்காக வாதாடும் வல்லமை மிக்க சக்தியாக மாறியது. அவரது தொலைநோக்குப் பார்வையும் வழிகாட்டுதலும் சவால் மிக்க தருணங்களில் கட்சியை வழிநடத்திச் செல்வதில் பிரதான கருவியாக இருந்தது, எப்போதும் இலங்கையர்கள் அனைவரதும் ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கியதான ஒரு பார்வை அவரிடம் இருந்தது.

இலங்கை நாடாளுமன்றில் மிக மூத்த அனுபவம் நிறைந்த மக்கள் பிரதிநிதியாக அவர் தனது இறுதி மூச்சு வரை மிளிர்ந்த அதேவேளை, தான் சார்ந்த இனத்தின் உரிமைக்காக எழுப்பிய அவரது உரத்த குரலில் இன்னுமொரு இனத்துக்கு எதிரான இனவாத , மற்றும் குரோதம் நிறைந்த குரல் என்றும் வெளிப்பட்டு நிற்காத, விரோதங்களை களைந்து பக்குவத்துடன் அனைவரையும் அரவணைக்கும் அரசியல்வாதியாக அவர் செயற்பட்டு நின்றார்.

அவரது கம்பீரமான தோற்றம் , கணீரென்ற சிம்மக்குரல் , அவர் முன்னெடுத்து சென்ற முயற்சிகள் அவரது முன்மாதிரிகள், தலைமைத்துவப் பண்புகள் என்றும் எங்களது மனதிலிருந்து அகற்ற முடியாத அளவுக்கு பசுமரத்து ஆணியாக பதிந்துள்ளது.

இந்த இக்கட்டான காலகட்டத்தில் அவரது இழப்பு ஈடு செய்யமுடியாத இழப்பாகும் .

இந்த துக்கத்தில் பங்கு கொள்கின்ற அதே நேரத்தில் அவர் காட்டிச்சென்ற வழிமுறைகள் எதிர்கால சந்ததிகள் அமைதி, நீதி, சமத்துவம் ஆகிய கொள்கைகளைப் பின்பற்றும் எண்ணத்துடன் சீர் தூக்கிப் பார்ப்பதற்காக அவரது அரசியல் மரபு , சமூக உணர்வு , கொள்கையில் கொண்டிருந்த உறுதி என்பன எதிர்கால சந்ததியினரை நியாயமான மற்றும் அமைதியான சமூகத்தை கட்டி எழுப்ப தொடர்ந்தும் ஊக்கமளித்துக் கொண்டே இருக்கும்.

அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்ப உறவுகள், நண்பர்கள், ஆதரவாளர்கள், அவரை நேசிக்கும் உலகளாவிய தமிழ் மக்கள் என அனைவருக்கும் அவரது இழப்பை தாங்கிக் கொள்ளக்கூடிய சக்தியை இறைவன் வழங்கவேண்டும் என்று பிரார்த்திப்பதுடன், எமது ஆழ்ந்த கவலையையும் தெரிவித்துக்கொள்கிறேன்.-என்றுள்ளது.

# கற்பிட்டியில் மோட்டார் சைக்கிளோட்டம்!

(கற்பிட்டி எம்.ஏச்.எம் சியாஜ்)

கற்பிட்டி கே.ஆர்.சீ அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட, ஹஜ் பெருநாள் மோட்டார் சைக்கிள் ஓட்டம் மற்றும் விளையாட்டு விழா எதிர்வரும் 07 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கற்பிட்டி தேத்தாவாடி ரேஸ் மைதானத்தில் இடம்பெறவுள்ளதாக ஏற்பாட்டுகுழு அறிவித்துள்ளது.

ஹஜ் பெருநாளைக்கு முந்திய தினங்களில் பெய்த தொடர் மழை காரணமாக தேத்தாவாடி ரேஸ் மைதானம் புனரமைப்பு செய்ய முடியாத நிலை ஏற்பட்டதாகவும் தற்போது காலநிலை ரேஸ் வைப்பதற்கு ஏற்றாற் போல காணப்படுவதனால் மைதானத்தின் புனரமைப்பு வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனவும் எதிர்வரும் 07 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ரேஸ் வைப்பது எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது என்று கே.ஆர்.சீ அமைப்பின் தலைவர் ஜே.எம். தாரீக் தெரிவித்துள்ளார்.



# வீரமுனையில் வரவேற்புக் கோபுரம் அமைத்தல் தொடர்பில் நல்லிணக்கம்

(பாறுக் ஷிஹான்)

நீண்ட காலமாக தமிழ், முஸ்லீம் மக்களிடையே சம்மாந்துறை வீரமுனை வரவேற்புக் கோபுரம் அமைப்பது தொடர்பில் இடம்பெற்று வந்த பிரச்சினைக்கு சுமூகமாக தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்காக வரவேற்புக் கோபுரம் அமைக்கப்படும் பகுதிக்கு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் நேரடியாக விஜயம் மேற்கொண்டு குறித்த வரவேற்பு கோபுரம் அமைக்கப்படும் இடத்திற்கும் வீரமுனை கோவிலுக்கும் உள்ள தூரத்தை நேரில் சென்று பார்வையிட்டார்.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை வீரமுனை வரவேற்புக் கோபுரம் அமைப்பது தொடர்பாக ஏற்பட்ட முரண்பாட்டினால் சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் குறித்த இடத்தை ஞாயிற்றுக் கிழமை (30) பார்வையிட கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் வருகை தந்ததுடன் குறித்த விடயத்தில் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரையும் சம்மாந்துறை பிரதேச சபை செயலாளர் காரியாலயத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

குறித்த கலந்துரையாடலானது மூடிய அறையினுள் நடைபெற்றதுடன் ஊடகங்களுக்கு செய்திகளை சேகரிப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

மேலும் குறித்த கலந்துரையாடலில், நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம் அதாவுல்லா, பாராளுமன்ற உறுப்பினர் த. கலையரசன், கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி – போக்குவரத்து – நீர்ப்பாசனம் – நீர் வழங்கல் – கிராமிய வீடமைப்பு – கிராமிய மின்சாரம் – கட்டிட நிர்மாண அமைச்சுக்களின் செயலாளராக எம்.கோபாலரத்தினம், சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ் .எல். எம். ஹனீபா, சம்மாந்துறை பிரதேச சபை செயலாளர் எம். முகம்மட், வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை தவிசாளர் எம்.ஐ.எம் றனுஸ், முன்னாள் சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினர் ஏ.சீ.எம். சகில், ஐக்கிய தேசியக் கட்சி சம்மாந்துறை தொகுதி அமைப்பாளர் வாஸித், சம்மாந்துறை நம்பிக்கையாளர் சபை உறுப்பினர்கள், வீரமுனை கோவில் உறுப்பினர்கள், பொலிஸ் உயர் அதிகாரிகள், இராணுவ உயர் அதிகாரிகள் என பலரும் பங்கேற்றிருந்தனர்.

கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான்,

சம்மாந்துறை வீரமுனை வரவேற்புக் கோபுரம் அமைப்பதில் முஸ்லிம் – தமிழ் உறவுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் இருப்பதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் அதாவுல்லா, கலையரசன், பள்ளிவாசல் தலைவர், கோவில் தலைவர், பிரதேச சபை செயலாளர், பிரதேச செயலாளர், நீர்ப்பாசன திணைக்கள தலைவர், வீதி அபிவிருத்தி அதிகார சபை தவிசாளர் போன்றவர்களிடம் இதற்கு பொறுப்பான திணைக்களத்தின் வரைவு படங்களையும் மற்றும் வளைவு கோபுரம் அமைக்கு பகுதியில் காணப்படும் முஸ்லிம் தமிழ் மக்களின் குடும்ப எண்ணிக்கை விவரங்கள் போன்றவற்றை சமர்ப்பிக்குமாறும் கேட்டுக் கொண்டார்.

இதற்கான தீர்வை ஒருமாதம் பத்து நாள்களுக்குள் சம்பந்தப்பட்டவர்கள் ருவதாக குறிப்பிட்டார்.






# மடு அன்னையின் நூற்றாண்டும் ஆடித் திருவிழா திருப்பலியும்

(மன்னார் நிருபர்
எஸ்.ஆர்.லெம்பேட்)

மருதமடு அன்னைக்கு முடி சூட்டிய நூற்றாண்டு விழாவும் ஆடித் திருவிழா திருப்பலியும் இன்று செவ்வாய்க்கிழமை (02) காலை 6.15 மணிக்கு மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானு வேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் கூட்டுத்திருப் பலியாக ஒப்புக் கொடுக்கப்பட்டது.

இன்று செவ்வாய்க்கிழமை (02) காலை 6.15 மணி அளவில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலை மையில், கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை மற்றும் குருநாகல் மறை மாவட்ட ஆயர் கலாநிதி ஹரோல்ட் அந்தோனி பெரேரா ஆகியோர் இணைந்து கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

கடந்த ஜுன் மாதம் 23 ஆம் திகதி கொடியேற்றத்தை தொடர்ந்து நவநாள் ஆராதனை திருப்பலிகள் இடம்பெற்று நேற்று திங்கட்கிழமை (01) மாலை வேஸ்பர்ஸ் ஆராதனை இடம்பெற் றுள்ளது.

இன்று மருதமடு அன்னைக்கு முடி சூட்டிய நூற்றாண்டு விழாவும் ஆடித் திருவிழா திருப்பலியும் மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலை மையில் கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை மற்றும் குருநாகல் மறை மாவட்ட ஆயர் கலாநிதி ஹரோல்ட் அந்தோனி பெரேரா ஆகியோர் , மற்றும் மடு பரிபாலகர் அருட்தந்தை எஸ்.ஞானப்பிரகாசம் அடிகளார், மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை கிறிஸ்து நாயகம் அடிக ளார் இணைந்து திருவிழா திருப்பலியை கூட்டுத் திருப்பலியாக தமிழ் சிங்கள மொழிகளில் ஒப்புக்கொடுத்தனர்.

அதனைத் தொடர்ந்து மடு அன் னைக்கு முடி சூட்டும் நிகழ்வு இடம் பெற்றது. மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை மற்றும் கொழும்பு உயர் மறைமாவட்ட ஆயர் கருதினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை இணைந்து முடி சூட்டி வைத்தனர்..

அதனைத் தொடர்ந்து கடந்த வருடம் மன்னார் மறைமாவட்ட ஆயரால் நூ ற்றாண்டு விழவை முன்னிட்டு ஏற்றி வைக்கப்பட்ட கொடி இன்றைய தினம் (02) செவ்வாய்க்கிழமை இறக்கி வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மடு அன்னை யின் திருச்சொரூப பவனி மற்றும் மடு அன்னையின் ஆசீர்வாதம் பக்தர்க ளுக்கு வழங்கப்பட்டது.

திருவிழா திருப்பலியில் அருட் தந் தையர்கள் ,அருட் சகோதரர்கள், வடமா காண ஆளுனர்,அரசியல் பிரமுகர்கள் திணைக்கள தலைவர்கள் உள்ளடங்க லாக சுமார் 7 லட்சத்துக்கும் அதிகமான பக்தர்கள் கலந்து கொண்டனர்.







தொடர்ச்சி▼



# மடு அன்னையின் நூற்றாண்டும் ஆடித் திருவிழா திருப்பலியும்




# மீன் பிடிக்கச் சென்றவர் மீன் குத்தியதில் மரணம்

யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் இருந்து மீன் பிடிக்க சென்றவர் மீன் குத்தி மரணமடைந்துள்ளார்.

மேற்படி சம்பவம் தொடர்பாக தெரிய வருவது,

யாழ்ப்பாணம் குரு நகர் பகுதியில் இருந்து கடற்றொழிலுக்கு சென்ற மீனவர் முரல் மீன் குத்தியதால் நேற்று இரவு மரணமடைந்துள்ளார்

உயிரிழந்தவர் இரண்டு பிள்ளைகளின் தந்தையான 29 வயதுடைய மைக்கேல் கொலின் டினோ ஆவார். இவர் யாழ்ப் பாணம் குருநகர் 5 மாடி யைச் சேர்ந்த வர் எனத் தெரிய வரு கின்றது.

நேற்று இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவரின் சடலம் யாழ். போதனா வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பான மேல திக விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சந்நிதியான் ஆச்சிரமத்தின் ஞானச்சுடர் வெளியீடும் பல்வேறு உதவிகள் வழங்கலும்

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவையின் மாதாந்த வெளியீடான ஞானச்சுடர் 318 இதழ் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி அமுதசுரபி மோகனதாஸ் சுவாமிகள் முன்னிலையில் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை உறுப்பினர் ஓய்வு பெற்ற அதிபர் சிவநாதன் தலைமையில் பஞ்ச புராண ஓதுதலுடன் ஆரம்பமானது.

தொடர்ந்து ஓய்வு பெற்ற அதிபர் இரா. செல்வவடிவேல் வெளியீட்டுரை நிகழ்த்தியதை தொடர்ந்து மதிப்பீட்டு உரையை ஆசிரியரும் சைவப் புலவரு மான கந்தசாமி கைலநாதன் நிகழத் தினார். தொடர்ந்து சிறப்பு பிரதிகள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் சைவ கலை பண்பாட்டு பேரவையின் நிர்வா கிகள், உறுப்பினர்கள், சந்நிதியான் ஆச்சிரம அடியவர்கள், தொண்டர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை, அம்பாறை மாவட்டத் தில் குடி தண்ணீர் வசதியின்றிய மக்க ளுக்கு குடி தண்ணீர் வழங்குவதற்கு அம்பாறை சைவநெறிக் கூடத்துக்கு 5லட்சத்து 50 ஆயணிரம் ரூபா பெறு மதியான உழவு இயந்திரப் பெட்டி ஒன்று அம்பாறை சைவநெறிக்கூடத் தலைவர் கணேசனிடம் கையளிக்கப்பட்டது.




# மாவட்ட ஐக்கிய மதங்களின் முனைப்பு எனும் அமைப்பால் வேலைத்திட்டம்

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை மாவட்ட ஐக்கிய மதங்களின் முனைப்பு என்ற அமைப்பின் 25 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பல்லின சிறுவர்களின் ஆளுமை பண்பில் ஐக்கியத்தை ஏற்படுத்தும் பல்வேறு வேலைத் திட்டங்கள் திருகோணமலை சீனக்குடா பகுதியில் சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்டன.

திருகோணமலை மாவட்ட சர்வோதய நிலையத்தின் அனுசரணையுடன், மாவட்ட ஐக்கிய மதங்களின் முனைப்பு அமைப்பின் தலைவர் அப்பு குருக்கள் சுப்பிரமணியம் சர்மா தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில், சமாதான ஊர்வலம், மரம் நடுகை மற்றும் சிரமதான பணிகள் என்பன மேற்கொள்ளப்பட்டன.

இந்தப் பகுதியில் உள்ள, பௌத்த, இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ ஆலயங்களில் உள்ள அறநெறி பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்கள் இந்த வேலை திட்டங்களில் ஈடுபடுத்தப்பட்டனர்.

மாணவர்கள், சீனக்குடா ஸ்ரீ போதி ராஜராம விஹாரையில் சிரமதான பணிகளிலும் மரம் நடுகைகளிலும் ஈடுபட்ட பின்னர், சீனக்குடா புனித அந்தோனியார் ஆலயத்துக்குச் சமாதான ஊர்வலத்தை மேற்கொண்டனர்.

அங்கு சிரமதான பணிகளிலும் மரம் நடுகைகளிலும் ஈடுபட்ட மாணவர்கள், அங்கிருந்து ஊர்வலமாக சீனக்குடா சித்தி விநாயகர் கோயிலுக்கு சென்றனர். அங்கு சிரமதான பணிகளிலும் மரம் நடுகைகளிலும் ஈடுபட்ட பின்னர், இறுதியாக ஊர்வலமாக சீனக்குடா அவுலியா ஆலிம் அப்பா ஜும்மா பள்ளிவாயிலுக்கு சென்றனர்.

இந்த பள்ளிவாயலில் சிரமதான பணி மற்றும் மரநடுகை ஆகியவற்றில் ஈடுபட்ட மாணவர்கள், அகதியா பாடசாலை நிர்வாகத்தினரால், சகவாழ்வுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட, சர்வ மத ஒன்று கூடலிலும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வுகளில் சீனக்குடா ஸ்ரீ போதி ரஜமகாவிஹாரையின் விஹாராதிபதி குணரத்தின தேரர், சீனக்குடா புனித அந்தோனியார் ஆலய அருட் தந்தை அண்டன் தேவசீலன், சீனக்குடா சித்தி விநாயகர் ஆலய குருக்கள் மூர்த்தி சர்மா மற்றும் சீனக்குடா அவுலியா ஆலிம் அப்பா ஜும்மா பள்ளிவாசல் ஹதீப் சஹாப்தின் ரியாஸ் ஆகிய சர்வ மத தலைவர்கள் கலந்து கொண்டனர்.

மாணவர்களுக்கு ஆசி வழங்கியதோடு, நாட்டில் இனங்களுக்கிடையே நிலையான சமாதானமும் ஐக்கியமும் உருவாவதற்கு பிரார்த்தனைகளிலும் அவர்கள் ஈடுபட்டனர்.

திருகோணமலை மாவட்ட ஐக்கிய மதங்களின் முனைப்பு அமைப்பின் செயலாளர் மௌலவி எம். வை. ஹதியத்துல்லா, மாவட்ட இணைப்பாளர் வி. கலைவாணன், மாவட்ட உதவி இணைப்பாளர் ஆர். பத்மினி, பிரதி இணைப்பாளர் வி. யசோதினி ஆகியோருடன், மாவட்ட சர்வோதய உறுப்பினர்கள், பெற்றார்கள் ஆகியோரும் நிகழ்வுகளில் கலந்து கொண்டனர்.





# ராகுல்காந்தியைப் போல செயல்படாதீர்கள்! தன் அணி எம்.பிக்களுக்கு மோடி அறிவுரை

புதுடெல்லி,ஜூலை02

நாடாளுமன்ற மரபுகள் மற்றும் விதிகளை பின்பற்றி செயல்பட வேண்டும் என்று தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி எம்.பி.,க்களுக்கு பிரதமர் மோடி அறிவுரை வழங்கினார்.

மக்களவையில் ராகுல்காந்தி போல் செயல்படாதீர்கள் என்றும் அவர் கூறினார்.

18 ஆவது நாடாளுமன்றத்தின் முதல் கூட்டத்தொடர் தற்போது நடந்து வருகிறது. ஜனாதிபதி உரைக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணையின் மீது விவாதம் இடம் பெறுகிறது. நீட்தேர்வு முறைகேடு உள்ளிட்ட பல வேறு பிரச்சினைகளை எதிர்க்கட்சிகள் எழுப்பி வருகின்றன. இதனால் நாடாளுமன்றத்தில் முன் எப்போதும் இல்லாத வகையில் அனல் பறக்கும் விவாதம் நடந்து வருகிறது.

இந்த பரபரப்பான சூழ்நிலையில் டெல்லியில் உள்ள நாடாளுமன்ற வளாகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகளின் எம்.பிக்கள் கூட்டம் நடைபெற்றது. தேசிய ஜனநாயக கூட்டணி எம்.பிக்கள் கூட்டத்தில் பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது:-

நாட்டு மக்களின் வளர்ச்சியே நமது குறிக்கோள். தேசிய ஜனநாயக கூட்டணி எம்.பி.,க்கள் மக்களின் நலனுக்காக பாடுபடவேண்டும். தேநீர் விற்றவர் எப்படி 3 ஆவது முறையாக பிரதமராகலாம் என காங்கிரஸ் கருதுகிறது. பா.ஜனதா கூட்டணியின் வெற்றியை ஏற்க முடியாமல் காங்கிரஸ் தவிக்கிறது.

மக்களவையில் ராகுல்காந்தி போல் செயல்படாதீர்கள். தகவல்களை சரிபார்த்து பேசவும். ஊடகங்களில் தேவையற்ற விமர்சனங்களை தவிர்க்க வேண்டும். நாடாளுமன்ற மரபுகள் மற்றும் விதிகளை பின்பற்றி செயல்பட வேண்டும்.

- இவ்வாறு அவர் கூறினார்.

தேசிய ஜனநாயக கூட்டணி எம்.பிக்கள் தாங்கள் பிரதமரின் வழிகாட்டுதல்படி செயல்படுவார்கள் என உறுதி அளித்தனர். இதனையடுத்து நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்று வந்த தேசிய ஜனநாயகக் கூட்டணியின் கட்சிகளின் எம்.பிக்கள் கூட்டம் நிறைவடைந்தது.

# மோடியின் உலகில் உண்மைக்கு இடமேயில்லை என்கிறார் ராகுல்




புதுடெல்லி,ஜூலை02

அவைக்குறிப்பில் இருந்து எதனை வேண்டுமென்றாலும் நீக்கலாம், உண்மையை மறைக்க முடியாது என்று ராகுல்காந்தி கூறினார்.

மோடியின் உலகத்தில் உண்மைக்கு இடமில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

பிரதமர் மோடி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசின் முதலாவது நாடாளுமன்ற கூட்டத்தொடர் கடந்த 24 ஆம் திகதி தொடங்கியது. இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தில் ஜனாதிபதி திரவுபதி முர்மு கடந்த 27 ஆம் திகதி உரை நிகழ்த்தினார். இதைத்தொடர்ந்து ஜனாதிபதி உரைக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணையின் மீது விவாதம் மக்களவையில் நடந்து வருகிறது.

இந்நிலையில், நாடாளுமன்ற வளாகத்தில் அவைக்குறிப்பு நீக்கம் குறித்து ராகுல்காந்தியிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு பதில் அளித்த ராகுல்காந்தி -

எனது பேச்சில் எதை வேண்டுமானாலும் நீக்கட்டும். ஆனால் நான் பேசியவை உண்மைதான். மோடியின் உலகத்தில் உண்மைக்கு இடமில்லை. ஆனால் யதார்த்தத்தில் உண்மையை நீக்க முடியாது. நான் சொல்ல வேண்டியதைச்சொன்னேன். அதுதான் உண்மை. - என்றார்.




# சாலையைக் கடக்கக் காத்திருந்தவர்கள் மீது கார் மோதியதில் 9 பேர் பலி; நால்வர் காயம்!

தென்கொரியா தலைநகர் சியோலின் பரபரப்பான சாலையில் நேற்று இரவு பயங்கர விபத்து ஏற்பட்டது.

சாலையைக் கடக்கக் காத்திருந்தவர்கள் மீது திடிரெனக் கார் மோதிய சம்பவத்தில் 9 பேர் உயிரிழந்தனர்.

சியோலின் சிட்டி ஹால் நகரின் முக்கிய சந்திப்பில் சாலையை கடக்க சிக்னலுக்காக மக்கள் நின்றுகொண்டிருந்தனர். அப்போது, சாலையின் மறுபுறம் கட்டுப்பாட்டை இழந்து வேகமாக வந்த கார், சாலையை கடந்த காத்திருந்தவர்கள் மீது மோதியது. இந்த கோர விபத்தில் 9 பேர் உடல்நசுங்கி உயிரிழந்தனர். மேலும், 4 பேர் படுகாயமடைந்தனர்.

இதையடுத்து, விரைந்து வந்த பொலிஸார் படுகாயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சேர்த்தனர். மேலும், விபத்தை ஏற்படுத்திய காரை ஓட்டிய 60 வயதான நபரை கைது செய்தனர். கைது செய்யப்பட்ட நபரிடம் நடத்தப்பட்ட முதற்கட்ட விசாரணையில் கார் திடீரென வேகமாக சென்றதாகவும், பிரேக் செயல்படவில்லை என்றும் தெரியவந்துள்ளது.



# லண்டன் சிறையில் கைதியும், பெண் அதிகாரியும் பாலியல் உறவில் இருந்த வீடியோ வெளியானது!

லண்டன்,ஜூலை 02

சிறையில் கைதியும், பெண் அதிகாரியும் பாலியல் உறவில் இருந்த வீடியோ வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இங்கிலாந்தின் தெற்கு லண்டன் வாண்ட்ஸ்வொர்த் மாவட்டத்தில் சிறைச்சாலை உள்ளது. இந்தச் சிறைச்சாலையில் பல்வேறு குற்ற வழக்குகளில் கைது செய்யப்பட்ட குற்றவாளிகள் அடைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், இந்த சிறைச்சாலையில் கைதியுடன் பெண் அதிகாரி பாலியல் உறவில் இருக்கும் வீடியோ சமூகவலைதளத்தில் வைரலாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சிறைச்சாலையின் பணியாற்றிய லிண்டா டி சவுசா அப்ரு (வயது 31) என்ற பெண் அதிகாரி கைதி ஒருவருடன் பாலியல் உறவில் இருந்துள்ளார். கைதியின் அறையில் கைதியுடன் பெண் அதிகாரி பாலியல் உறவில் இருக்க அதை மற்றொரு கைதி செல்போனில் வீடியோவாகப் பதிவு செய்துள்ளார். இந்த வீடியோ தற்போது வைரலான நிலையில் இது குறித்து சிறைத்துறை அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

வீடியோ வைரலான நிலையில் கைதியுடன் பாலியல் உறவில் இருந்த பெண் அதிகாரி லிண்டா தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

கனடா முரசு
பக்கங்கள் - 7
செவ்வாய்க்கிழமை 02/07/2024

## பிறம்டன் விபத்தில் 20 வயது யுவதி பலி

ஒன்ராரியோ, ஜூலை 2

பிறம்டனில் இடம்பெற்ற வாகன விபத்தில் 20 வயதுடைய பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். ஜூலை முதலாம் திகதி C2 ▶



# பிரதமர் பதவியில் நீடிப்பதில் ஜஸ்டின் ட்ரூடோ மிக உறுதி

ஒன்ராரியோ, ஜூலை 2

கனடாவின் பிரதமராக தொடர்ந்தும் நீடிப்பதில் தாம் உறுதியுடன் உள்ளார் என ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

டொரன்டோ சென்-போல்ஸ் இடைத்தேர்தல் முடிவுகளின் பின்னர் தமது பதவி குறித்து பலவிதமான கருத்துக்கள் வெளிவருவதைத் தாம் அறிந்திருக்கின்றார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தோல்வி ஒன்றைத் தொடர்ந்து பல்வேறு விமர்சனங்கள் வெளிவருவது சகஜமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கனடா தினத்தையொட்டி அவர் வெளியிட்டுள்ள செய்தியிலேயே அவர் இந்த விடயங்களைக் குறிப்பிட்டுள்ளார்.

சிறந்த கனடா ஒன்றை கட்டியெழுப்புவதற்காக ஒவ்வொரு நாளும் கடுமையாக உழைக்கின்றார் எனவும், அடுத்த கனடா தினத்திற்காகவும், மேலும் பல கனடா தினத்திற்காகவும் தாம் ஆவலுடன் காத்திருக்கின்றார் எனவும் அவர் கூறியுள்ளார்.

# பலஸ்தீன ஆதரவுப் போராட்டக்காரர்களின் இடையில் நிறுத்தப்பட்ட பிறைட் ஊர்வலம்

ஒன்ராரியோ, ஜூலை 2

டொரன்டோ நகரில் இடம்பெற்ற வருடாந்த பிறைட் ஊர்வலம், பலஸ்தீன ஆதரவுப் போராட்டக்காரர்களின் இடையீட்டினால் இடை நடுவில் நிறுத்தப்பட்டது.

வருடாந்தம் டொரன்டோவின் டவுன்டவுன் பகுதியில் ஆரம்பித்து நேதன் பிளிப்ஸ் ஸ்குயார் வரை செல்லும் டுபுடீவுஞஐயூ குழுவினரின் இந்த பிறைட் ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டிருந்தனர்.

கனடாவின் முன்னணி பெரு நிறுவனங்கள், வர்த்தக அமைப்புக்கள், தொண்டு நிறுவனங்கள், கல்லூரி – பல்கலைக்கழக குழுக்கள் என பெரும் எண்ணிக்கையிலான தர்ச்ப்புகள் ஊர்வத்தில் கலந்து கொண்டமையுடன், C2 ▶





# பலஸ்தீன ஆதரவுப் போராட்டக்காரர்களின் இடையில் நிறுத்தப்பட்ட பிறைட் ஊர்வலம்

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆயிரக்கணக்கான மக்களும் வீதியின் இரு மருங்கிலும் கூடி நின்று ஊர்வலத்தை வரவேற்றிருந்தனர்.

இந்த நிலையில், ஊர்வலத்தின் ஓர் அங்கமாக பதிவு செய்து கலந்து கொண்டிருந்த கோலிஸன் எகெயின்ஸ்ட் பிங்க்வோஷிங் என்ற அமைப்பு, வெல்லஸ்லி ரயில் நிலையத்திற்கு அருகில் ஊர்வலத்தின் நடுவே வீதியில் அமர்ந்து, பலஸ்தீன ஆதரவு கோஷங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட ஆரம்பித்தனர்.

இதனையடுத்து, நிகழ்வு ஒருங்கிணைப்பாளர்கள் போராட்டக்காரர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் பலனளிக்காமையால், ஊர்வலத்தின் ஒரு பகுதியினர் நேதன் பிளிப்ஸ் ஸ்குயாரை அடைவதற்கு முன்னரே, நிகழ்வை இடைநிறுத்துவதாக ஒழுங்கமைப்பாளர்கள் அறிவித்தனர்.








**பிறம்டன் விபத்தில்...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காலை 6.35 மணியளவில் ஹைவே 50 மற்றும் கொலரெய்ன் டிரைவ் அருகில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

போக்குவரத்து டிரக் ஒன்றும் கார் ஒன்றும் மோதியமையாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

காரை செலுத்தி வந்த 20 வயதான பெண்ணே முதலுதவி பலனின்றி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

டிரக்கை செலுத்தி வந்த சாரதிக்குக் காயங்கள் எதுவும் ஏற்படவில்லை எனவும், விசாரணைகளுக்கு அவர் ஒத்துழைக்கின்றார் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# கனடிய இராணுவ வீரரின் உடல் நூறு ஆண்டுகளின் பின் அடக்கம்

**நியூபவுன்ட்லான்ட், ஜுலை 2**

முதலாவது உலகப் போரின் போது உயிரிழந்த கனடிய இராணுவ வீரரின் உடல் நியூபவுண்லாண்ட்டில் நேற்று (ஜுலை-1) நல்லடக்கம் செய்யப்பட்டது.

முதலாவது உலகப் போரின் போது பிரான்ஸ் களத்தில் போராடி உயிரிழந்த இனந்தெரியாத கனடிய இராணுவ வீரரின் உடல் இறுதியாக கனடாவை வந்தடைந்தது.

நியூபவுண்லாண்ட் மற்றும் லெப்ர டோர் நகரில் ஆயிரக்கணக்கில் கூடிய மக்கள் உடலுக்கு இறுதி மரி யாதை செலுத்தினர்.

சுமார் நூறு வருடங்களுக்குப் பின் னர் இந்த இராணுவ வீரரின் உடல் இராணுவ மரியாதையுடன் நல்லடக்கம் செய்யப்பட்டது.

நியூபவுண்லாண்டைச் சேர்ந்த சுமார் இராணுவ வீரர்கள் 1916ஆம் ஆண்டு ஜுலை முதலாம் திகதி பிரான்ஸ் களத்தில் போராடி, 68 பேர் மாத்திரமே உயிர்தப்பியமை குறிப்பி டத்தக்கது.







# அரிய வகை ஆமைகளைக் கடத்த முயன்ற சீனப் பெண் சிக்கினார்!



**கியூபெக், ஜூலை 2**

கியூபெக் எல்லையில் வெர்மவுன்ட் ஏரியூடாக ஆமைகளைக் கடத்த முயன்ற சீனப் பெண் ஒருவரை எல்லைப் பாதுகாப்பு பிரிவினர் கைது செய்துள்ளனர்.

கனடாவில் பாதுகாக்கப்பட்ட உயிரினமாக வகைப்படுத்தப்பட்டுள்ள ஈஸ்டர்ன் பொக்ஸ் இன ஆமைகளை இந்தப் பெண் கடத்த முயற்சித்த போது ஜூன் 28ஆம் திகதி கைது செய்யப்பட்டார் என பெடரல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில் எல்லைப் பாதுகாப்பு படையினர் தெரிவித்துள்ளனர்.

வேன் யீ எனப்படும் குறித்த பெண்ணிற்கு, இரு ஆண்கள் உதவி செய்துள்ளமை குறித்து தகவல் கிடைத்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

காற்றடைக்கப்பட்ட படகொன்றில் அமெரிக்கா நோக்கிச் செல்ல முயற்சித்த போதே இந்த கைது இடம்பெற்றுள்ளது.

இதன்போது குறித்தப் பெண்ணிடமிருந்து 29 ஆமைகள் மீட்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த ஆமைகள் சீன கறுப்புச் சந்தையில் தலா 1,000 அமெரிக்க டொலர்களை வரை விற்பனை செய்யப்படுகின்றன எனக் கூறப்படுகின்றது.




# வெஸ்ட்ஜெட் விமான சேவை வேலைநிறுத்தம் முடிவுக்கு!

**ஒன்ராரியோ, ஜூலை 2**

தனது பொறியியலாளர்களுடன் வெஸ்ட்ஜெட் விமான சேவை நிர்வாகம் உடன்பாட்டிற்கு வந்ததையடுத்து, அந்த நிறுவனத்தில் நீடித்த வேலைநிறுத்தம் முடிவுக்கு வந்துள்ளது.

வெஸ்ட்ஜெட் நிர்வாகத்துடன் நீண்டகாலமாக முன்னெடுக்கப்பட்டு வந்த பேச்சுத் தோல்வியடைந்தமையால் கனடாவின் நீண்ட வார இறுதி விடுமுறை சமயம் விமானப் போக்குவரத்தை பாதிக்கும் வகையில் வெஸ்ட்ஜெட் பொறியியலாளர்கள் வேலைநிறுத்தத்தில் இறங்கினர்.

இந்த வேலைநிறுத்தத்தின் காரணமாக கனடியர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு சாதாரணமானது அல்ல எனவும், உடனடித் தீர்வு அவசியமாகவிருந்ததாகவும் விமான சேவைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து விமானசேவை நிறுவனத்தினால் வெளியிடப்பட்டுள்ள செய்தி அறிக்கையில், இந்த வேலைநிறுத்தத்தினால் மேலதிக பாதிப்பு ஏற்படாமல் தடுப்பதே தமது நோக்கமாக இருந்ததாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, வேலைநிறுத்தம் இடம்பெறாதிருந்தால் இவ்வாறான உடன்படிக்கை சாத்தியமடைந்திருக்காது எனவும், வேலைநிறுத்தம் காரணமாக விமானசேவையில் இடம்பெற்ற தடங்கல்களுக்கு வருத்தம் தெரிவிக்கின்றார்கள் எனவும் பொறியியலாளர்கள் தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

வேலைநிறுத்தம் முடிவடைந்த போதிலும், சேவைகள் வழமைக்கு திரும்ப சில நாள்கள் ஆகும் என விமான சேவை நிறுவனம் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளது.



# திருட்டு டிரக்கில் எட்டு இடங்களில் துப்பாக்கிப் பிரயோக சம்பவங்கள்

## டொரன்டோவில் வார இறுதியில் நடந்த அட்டகாசம்

**ஒன்ராரியோ, ஜூலை 2**

வாரஇறுதியில் டொரன்டோவில் ஆகக்குறைந்த எட்டு துப்பாக்கிப் பிரயோக சம்பவங்களுடன் தொடர்புடைய டிரக் ஒன்றைப் பொலிஸார் தேடி வருகின்றனர்.

இந்தத் துப்பாக்கிப் பிரயோகங்களினால் எவருக்கும் காயமோ, உயிராபத்தோ ஏற்படவில்லையெனவும், ஆனாலும் வாகனங்கள், வீடுகள், வியாபார ஸ்தலங்கள் என்பன சேதமடைந்துள்ளன எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

ஜூன் 29ஆம் திகதி அதிகாலை 2 மணிக்கு ஆரம்பித்த இந்தத் துப்பாக்கிப் பிரயோக சம்பவங்கள், ஜூன் 30ஆம் திகதி மாலை 7.45 வரை ஸ்கார்பரோ பொலிஸ் பிரிவுகள் 41 மற்றும் 42இல் பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

திருடப்பட்ட கறுப்பு நிற நான்கு கதவுகளைக் கொண்ட ஹொன்டா சீ.ஆர்.வி ரக வாகனம் ஒன்றே இந்த சம்பவங்கள் அனைத்திலும் சம்பந்தப்பட்டுள்ளது எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

எனினும், இந்த சம்பவங்களில் சம்பந்தப்பட்ட சந்தேகநபர்கள் எத்தனைப் பேர் என்பது குறித்து விவரங்கள் எதுவும் இல்லை எனவும் பொலிஸார் கூறியுள்ளனர்.



# மானிடோபாவில் வானில் தோன்றிய ஒளிக் கோளம்

கனடாவில் மானிடோபா மாகாணத்தில் காரில் பயணித்துக்கொண்டிருந்த தம்பதியினர், வானில் திடீரென ஒரு ஒளியை கண்டுள்ளனர்.

இரண்டு கோளங்களாக நெருப்பு பிழம்பு போல அது பிரகாசமாக ஒளிர்ந்துள்ளது.

இன்னும் அருகில் சென்று பார்த்தபோது மேலும் இரண்டு கோள உருண்டைகள் ஒளிர ஆரம்பித்துள்ளது.

மொத்தமாக 4 சூரியன்கள் ஒளிர்வதைப் போல் அவை காட்சியளித்துள்ளன.

ஒரு வேளை அந்தத் தம்பதி பார்த்தவை வேற்றுக்கிரகவாசிகளின் பறக்கும் தட்டுகளா இருக்குமா என்ற சந்தேகமும் எழுப்பப்பட்டது.

இந்த நிகழ்வை வீடியோ எடுத்த தம்பதிகள் அதனை சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளனர்.



# பொலிஸாரின் துப்பாக்கிச்சூட்டில் எட்மாண்டன் பகுதியில் ஒருவர் பலி

கனடாவில் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் நபர் ஒருவர் கொல லப்பட்டுள்ளார்.

எட்மாண்டனின் ப்ரேசர் பகுதியின் என்தனி ஹென்டே பகுதியில் கடந்த சனிக்கிழமை இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வாகன விபத்து ஒன்றை மேற்கொண்டு தப்பிச் சென்றவர் மீதே பொலிஸார் துப்பாக்கி சூடு நடத்தியுள்ளனர்.

வாகனம் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானதாகப் பொலி ஸாருக்குத் தகவல் கிடைக்கப் பெற் றுள்ளது.

விபத்திற்குக் காரணமான நபர் சம்பவ இடத்தை விட்டுத் தப்பிச் சென்றுள்ளார் எனவும் பொலிஸா ருக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

பின்னர் பொலிஸார் அந்த நபரை எப்படிக் கண்டுபிடித்து வழிமறித்தனர் என்பது தெரிய வரவில்லை.

28 வயதான அந்த நபர் தப்பிச் செல்ல முயன்றபோது ஏற்பட்ட இழுபறி யில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவத்தில் படுகாயம் அடைந்த அவர் வைத்தியசாலையில் சேர்க்கப் பட்ட போதும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் பொலிஸாருக் கோ அல்லது வேறு பொது மக்களுக் கோ காயங்கள் ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசா ரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.



# நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்திய கல்கரி மக்களுக்கு மேயர் பாராட்டு

கனடாவின் அல்பர்ட்டா மாகாணத் தில் கல்கரி நகரில் நீர் விநியோகம் நெருக்கடியை ஏற்படுத்தியிருக்கும் சமயத்தில் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்திய மக்களுக்கு நகர மேயர் கொன்டெக் நன்றி பாராட்டி யுள்ளார்.

கடந்த வியாழக்கிழமையன்று கூடு தல் அளவில் நீரை பயன்படுத்திய காரண மாக அவர் மக்களை விமர்சனம் செய்தி ருந்தார்.

இந்த நிலையில் வெள்ளிக்கிழமை நீர் பயன்பாடு குறைவாக காணப்பட்டது.

வழமையாக நகர மக்கள் நுகரும் நீரின் அளவை விடவும் வெள்ளிக் கிழமை 23 வீத அளவில் நீர் பயன்பாடு குறைக்கப்பட்டிருந்தது.

இவ்வாறு நீரைக் குறைந்த அள வில் அல்லது சிக்கனமாக பயன்படுத் தியமைக்கு நகர மேயர் நன்றிகளை தெரிவித்துள்ளார்.

கல்கரி நகரில் கடந்த சில வாரங்க ளாக நீர்க் குழாய்ப் பழுது காரண மாக நீர் விநியோகம் பாதிக்கப்பட் டுள்ளது.

இந்த நிலையில் நீரை சிக்கனமாக பயன்படுத்துமாறு கோரிக்கை விடுக்கப் பட்டு இருந்தது.

இந்த கோரிக்கைக்கு அமைய நகர மக்கள் நீரை சிக்கனமாக பயன்படுத்தி யுள்ளனர்.

நீர் குழாய் பழுது பார்க்கும் நடவடிக் கைகள் முன்னெடுக்கப்பட்டு வரு வதாகவும் விரைவில் நீர் பயன்பாடு வழமைக்கு திரும்பும் எனவும் அறி விக்கப்பட்டுள்ளது.

# மக்களின் பணத்தில் நத்தார் சுற்றுலா சென்ற கனடிய அரசியல்வாதிக்கு நேர்ந்த நெருக்கடி

கனடாவில் என்.டி.பி கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் மக்களின் வரிப்பணத்தில் சுற்றுலா சென்றமை சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

புதிய ஜனநாயக கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நிக்கி அஸ்தன், சுற்றுலா ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

குடும்பத்தினருடன் அவர் இவ்வாறு சுற்றுலா பயணத்தை மேற்கொண்டிருந்தார்.

இதற்காக மொத்தமாக 17 ஆயிரம் டொலர்கள் செலவிடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கியூபெக் மற்றும் மொன்றியல் ஆகிய பகுதிகளுக்கு நத்தர் பண்டிகைக் காலத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்



அஸ்தன் சுற்றுலாப் பயணங்களை மேற்கொண்டிருந்தார்.

அஸ்தன் அவரது கணவர் மற்றும் இரண்டு பிள்ளைகளுடன் இவ்வாறு சுற்றுலாப் பயணம் செய்திருந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஒட்டாவாவில் அமைந்துள்ள தமது குடியிருப்பில் மூட்டைப் பூச்சி மருந்து தெளிக்கப்பட்டதன் காரணமாக அவசரமாக தாங்கள் வெளியிடத்திற்கு செல்ல நேரிட்டதாகவும், இதனால் இவ்வாறு செலவு ஏற்பட்டது எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் அஸ்தன் தெரிவித்துள்ளார்.

இந்த நாடாளுமன்ற உறுப்பினர் செலவிட்ட தொகையில் 2,900 டொலர்களை அவர் மீள செலுத்தியுள்ளார்.

இந்தத் தொகை எதற்காக செலவிடப்பட்டது என்பது பற்றிய விவரங்கள் வெளியிடப்படவில்லை.

## கனடாவில் வாகன சோதனையின்போது சிக்கிய கொக்கெயின் போதைப்பொருள்




கனேடிய நகரமொன்றில், பொலிசார் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தபோது, கொக்கெயின் போதைப் பொருளுடன் மூவர் வசமாகச் சிக்கினர்.

கனடாவின் ஒன்ராறியோவில் உள்ள Greater Sudbury நகரில், கடந்த வார இறுதியில் (28 ஆம் திகதி அதிகாலை 2 மணியளவில்) பொலிஸார் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தபோது, முகப்பு விளக்குகளை அணைத்த நிலையில் பயணித்த கார் ஒன்றைக் கண்டு, அந்தக் காரை நிறுத்தியுள்ளார்கள்.

உடனே, காருக்குள்ளிருந்தவர்கள் எதையோ மறைத்து வைக்க முயல்வதைப் பொலிஸார் கவனித்துள்ளார்கள்.

அது போதைப்பொருள் என தெரியவரவே, காருக்குள்ளிருந்த மூன்று பேரைக் கைது செய்ய முயன்றுள்ளார்கள் பொலிஸார்.

அப்போது அவர்களில் ஒருவர் தப்பியோட முயல, பொலிஸார் அவரைத் துரத்திச் சென்று பிடித்துள்ளார்கள்.

தான் பொலிஸாரிடம் சிக்கிக்கொள்ளப்போவதை உணர்ந்த அந்த நபர் உடனே எதையோ தூக்கி வீசியுள்ளார்.

பொலிஸார் அது என்ன என பார்க்க, அவர் தன்னிடம் கூடுதலாக கொஞ்சம் போதைப்பொருளை ஒளித்து வைத்திருந்தது தெரியவந்துள்ளது.

அதேசமயம் காருக்குள் திறந்த நிலையில் மதுப்புட்டிகளும் இருந்துள்ளன.


அவர்களிடமிருந்த போதைப்பொருளைக் கைப்பற்றியுள்ள பொலிஸார், அவர்கள் மூன்று பேரையும் கைது செய்து அவர்களிடம் விசாரணை மேற்கொண்டுவருகிறார்கள்.

சுமார் 13 ஆயிரத்து 220 டொலர் பெறுமதியான 132 கிராம் கொக்கெயின் அவர்களிடமிருந்து மீட்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

30, 31 வயதுடைய இரு ஆண்களும், 34 வயதுடைய பெண் ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

## 19 வயது பேரனுடன் இணைந்து பட்டம் பெற்ற 76 வயது தாத்தா!

### மானிடோபா பகுதியில் நடந்த சாதனை



கனடாவின் மானிடோபா பகுதியில் 19 வயதான தனது பேரனுடன் 76 வயதான தாத்தாவும் பட்டம் பெற்றுக் கொண்டுள்ளார்.

ஜுன் ஜேம்ஸ் ஈஸ்டர் என்ற 76 வயதான நபரே இவ்வாறு பட்டம் பெற்றுக் கொண்டுள்ளார்.

ஈஸ்டர், 19 வயதான பெர்சின் நைட் என்ற தனது பேரனுடன் இணைந்து பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற்றுக் கொண்டுள்ளார்.

இருவரும் ஒரே வகுப்பில் பட்டம் பெற்றுக் கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தனது பேரனுடன் இணைந்து பட்டம் பெற்றுக்கொள்ளக் கிடைத்தமை பெரும் மகிழ்ச்சி அளிப்பதாக ஈஸ்டர் தெரிவிக்கின்றார்.

தனது பதினாறாம் வயதில் பாடசாலையை விட்டு வெளியேற நேரிட்டதாகவும் பின்னர் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வந்தார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

திருமண பந்தத்தில் இணைந்து கொண்டு பிள்ளைகள் பெற்றுக் கொண்டதன் பின்னர் தமக்கு கிடைக்காத கல்வியை பெற்றுக் கொள்ளுமாறு குடும்பத்தினரைத் தாம் ஊக்கப்படுத்தினார் என அவர் தெரிவிக்கின்றார்.

பட்டக் கல்வியை இடை நடுவில் கைவிடுவதற்கு பல சந்தர்ப்பங்களில் நினைத்த போதிலும் இறுதியில் வெற்றிகரமாக கற்கைநெறியை பூர்த்தி செய்யக் கிடைத்ததாகவும் அவர் கூறுகின்றார்.

இந்த மகிழ்ச்சியான தருணத்தில் மறைந்த தமது மனைவியை மிகவும் நினைத்துப் பார்ப்பதாக அவர் தெரிவிக்கின்றார்.

இவ்வாறு 76 வயதில் தாம் பட்டம் பெற்றுக் கொண்டமை ஏனைய பலருக்கும் உந்து சக்தியாக அமையும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

குசழவெநைச ஆழளயமயாமைநபெ பாடசாலையில் இந்த இருவரும் டிப்ளோமா கற்கை நெறிகளை பூர்த்தி செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.